Sri MANAKULA VINAYAGAR
Medical college and Hospital
*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

MANA - KURAL
*The official podcast of SMVMCH*

**Name of Resource person:**
**Dr.T.Bharath Kumar**

**Podcast Title: World Immunization Week**

**Department: Paediatrics**

**Category: (Select relevant category)**
**Public Awareness**

**TRANSCRIPT**

வணக்கம்,

நான் ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை. குழந்தைநலத்துறையின் முதன்மை பேராசிரியர் டாக்டர். பரத்குமார் பேசுகிறேன். நான் இன்று தடுப்பூசி போடுவதன் அவசியத்தை வலியுறுத்த வந்துள்ளேன்.

வருடம் தோறும் ஏப்ரல் 24 ஆம் தேதி முதல், ஒரு வாரம் உலக தடுப்பூசி வாரமாகக்கொண்டாடப்படுகிறது. இன்று பெற்றோரிடம் எழும் பொதுவான கேள்வி தடுப்பூசி அவசியமா என்பது? அதற்கு தடுப்பூசியை பற்றிய புரிதல் முதலில் வேண்டும் தடுப்பூசி என்றால் என்ன?

உலகில் பரவலாக பல கொடிய நோய்கள் மக்களை மிரட்டிக் கொண்டிருக்கின்றன. அவைகளில் மிக ஆபத்தானவையாக கருதப்படும் நோய்களுக்கான எதிர்ப்பு சக்தியை நமது உடம்பே உருவாக்கி கொண்டால் அந்த நோயை வராமல் வென்று விட முடியும் என்பதே தடுப்பூசி போடுவதன் நோக்கமாகும்.

அவ்வாறு போடும் பட்சத்தில் அந்த நோயை உலகத்தை விட்டு விரட்டி அடித்து விடலாம். அதற்கு நல்ல உதாரணம் இன்று பல பேருக்கு தெரியாத நோயான சின்னம்மை (Small Pox) இவ்வுலகத்தில் இருந்து முற்றிலுமாக நீக்கப்பட்டு விட்டது அடுத்து போலியோ வைரஸை 100% ஒழிப்பை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு ஒவ்வொரு நோய்க்கும் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் பட்சத்தில் நமது எதிர்கால சந்ததியிணரை நோயற்ற உலகில் வாழ வழிவகை செய்யலாம்.

இதனை இலக்காக கொண்டு நமது அரசு பெரும்பாலான மிக விலை உயர்ந்த தடுப்பூசிகளை ஒவ்வொரு அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகள் கிராமம் தோறும் உலக ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரை அனைத்து இடங்களிலும் ஒவ்வொரு குழந்தைக்கு இலவசமாக அளித்து வருகிறது. ஆகையால், அனைவரும் தடுப்பூசி போடுவதை தவிற்காமல் கொடுத்த தவணையில் தவறாமல் போட்டுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு போடும் பட்சத்தில் ஆரோக்கியமான உலகை அடுத்த சந்ததியினருக்கு தந்து விட்டு செல்லலாம்.

வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

**Signature of the Resource Person**

**Signature of the HOD**

Dr. T. BHARATH KUMAR
Regd. No: 75119
PROFESSOR & HEAD
Department of Pediatrics
Sri Manakula Vinayagar Medical College & Hospital
Kalitheerthalkuppam, Madagadipet,
Puducherry-605107.